செய்தி வெளியீடு எண்:245 நாள்: 29.04.2017

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் விதி 110இன் கீழ் பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் பிறந்த நாளினை "**தமிழ்க் கவிஞர் நாள்**" என்ற பெயரில் ஆண்டுதோறும் அரசு விழாவாகக் கொண்டாட ஆணையிட்டதன்படி கடந்த ஆண்டு 2016–17ஆம் ஆண்டில் 125ஆவது பிறந்த நாள் தமிழ்க் கவிஞர் நாளாகக் கொண்டாடப்பட்டது. இந்த ஆண்டு 29.04.2017 ஆம் நாளன்று அவரின் 126ஆவது பிறந்த நாள் **தமிழ்க் கவிஞர் நாள்** விழாவாக தமிழ் வளர்ச்சித் துறையால் சென்னை, தரமணியிலுள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் உள்ள பேரறிஞர் அண்ணா கருத்தரங்குக் கூடத்தில் காலை 9.00 மணி முதல் மாலை 7.00 மணி வரை நடைபெற்றது.

இவ்விழாவில் மாண்புமிகு இந்து சமயம் மற்றும்அறநிலையங்கள், தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் திரு. சேவூர் சோ. இராமசந்திரன் அவர்கள் 2014ஆம் ஆண்டில் வெளியான சிறந்த தமிழ் நூலின் நூலாசிரியருக்கும், அந்நூலைப் பதிப்பித்த பதிப்பகத்தாருக்கும் பரிசுத் தொகையையும் பாராட்டுச் சான்றிதழையும் வழங்கினார்கள். மேலும், பேராசிரியர் தி.மு. அப்துல் காதர், திரு. கோ. இளவழகனார் (தமிழ்மண் பதிப்பகம்) ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசு செயலாளர் (பொ) திரு. இரா.வெங்கடேசன் இ.ஆ.ப., அவர்கள் தலைமையுரையாற்றினார். தமிழ் வளர்ச்சி இயக்குநர் (பொ) முனைவர் கோ. விசயராகவன் அவர்கள் வரவேற்புரை வழங்கினார்.

மேலும் இவ்விழாவின் பிற்பகல் நிகழ்ச்சியாக, **பாவேந்தர் பாடல்களில் விஞ்சி நிற்பது சமூதாய உணர்வே! தமிழ் உணர்வே!** என்ற தலைப்பிலான **பட்டிமன்றம்,** திரு சீனி சம்பத் தலைமையில் திரு.த.கோ. சதாசிவம், பேரா.சுந்தரவள்ளி, பேரா. சாரதி பஞ்சாட்சரம், பேரா. செல்வி வேதநாயகி ஆகியோர் பங்கேற்று பேசினர்.

**துறைதோறும் துறைதோறும் துடித்தெழுந்தே என்ற தலைப்பிலான கருத்தரங்கு பேராசிரியர் ஒப்பில்லா மதிவாணன்,** தலைவர், தமிழ் இலக்கியத்துறை, சென்னைப் பல்கலைக் கழகம் அவர்கள் தலைமையில் முனைவர் ந. அருள், மொழிபெயர்ப்பு இயக்குநர், சென்னை, கபிலர் விருதாளர் முனைவர் இல.க.அக்னிபுத்திரன், முனைவர் க. பசும்பொன், தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர், பேரா அரங்க. பாரி, அண்ணாமலை பல்கலைக் கழகம், சிதம்பரம் திரு. அ. மதிவாணன், முதுநிலை மொழி பெயர்ப்பாளர்

தலைமைச் செயலகம், தமிழ்ச் செம்மல் விருதுபெற்ற திரு. மா. பெரியசாமி, புலவர் வே. பதுமனார் ஆகியோர் தங்களது கருத்துகளை வழங்கினர்.

**தமிழ் எங்கள் உயிருக்கு நேர்** என்ற **கவியரங்கில் புலவர் வெற்றியழகன் தலைமையில்** பாவரசு பாரதி சுகுமாரன், கவிஞர் கருமலைத் தமிழாழன், கவிஞர் ச. இலக்குமதி முன்னிலையில் கவிஞர்கள் இதயகீதம் இராமனுசம், சிந்தைவாசன், வாலிதாசன், பாசிகாபுரம் வெங்கடேசன், அகிலாஜ்வாலா, க. மல்லிகா, கோவி.ஆறுமுகம், இதயம் கிருட்டிணா, கூரம் துரை ஜீவா அசோகன், சீ. விக்கிரமன், சேக்கிழார், நம்மஊர் கோபிநாத், கோவிந்தராசன் பாலு, முனைவர் தே. சாந்தகுமார், பெ.கி. பிரபாகரன், ம. அ. சேகர், வயலை பாரதிவாசன், உடையார்கோவில் குணா ஆகியோர் கவிதை வாசித்தனர்.

**எழுந்திரு நீ இளந்தமிழா!** தலைப்பிலான **இளையோர் அரங்கத்தில் பழ. பாசுகர் தலைமையில்** கவிஞர்கள் ரேகா, மு, இராசுகுமார், தேவி, சரவணன், கோ.மணி, சாந்தி, கு. சண்முகப்பிரியா ஆகியோர் உரையாற்றினர்.

விழா இடையில் செல்வி குயில்மொழியின் ஆடல் நிகழ்ச்சி நடைபெற்றது. நிறைவாக காவல் துறை உதவித்தலைவர் (சட்டம் ஒழுங்கு) **திரு இரா. திருநாவுக்கரசு, இ.கா.ப.,** அவர்கள் நிறைவுரையாற்ற வி.ஜி.பி உலகத் தமிழ்ச் சங்கத் தலைவர் கவிச்சக்கரவர்த்தி **டாக்டர் வி.ஜி. சந்தோசம்,** வழக்குரைஞர் அருள்மொழி ஆகியோர் கருத்துரை வழங்க தமிழ் வளர்ச்சித் துறை **துணை இயக்குநர் (நி), திரு. ம.சி தியாகராசன்** அவர்களின் நன்றியுரையோடு விழா இனிதே நிறைவுற்றது.

இவ்விழாவில் 2014ஆம் ஆண்டு வெளிவந்து சிறந்த நூல் பரிசுப் போட்டிக்கு வரப்பெற்ற 33 வகைப்பாடுகளுள் 31 வகைப்பாடுகளில் பரிசுப் போட்டிக்கு நூல்கள் வரப்பெற்று பரிசுப் பெற்ற நூல்களின் நூல் வகைப்பாடு, நூலின் பெயர், நூல் ஆசிரியர், நூலின் பதிப்பகத்தார் ஆகிய விவரங்கள் பின்வருமாறு அளிக்கப்பட்டுள்ளன. இவ்விழாவில் பரிசு பெறும் நூலாசிரியருக்குப் பரிசுத் தொகையாக ரூ. 30,000/–மும் அந்நூலைப் பதிப்பித்த பதிப்பகத்தாருக்கு ரூ. 10,000/–மும் வழங்கப் பெற்றன.

**1.மரபுக்கவிதை –** கவிதைப்பூக்காடு, கவிக்கோ ஞானச்செல்வன் (எ) திரு. கோ. திருஞானசம்பந்தம் , மணிவாசகர் பதிப்பகம். 2. **புதுக்கவிதை –** மண்ணும் மழை நீரும், திரு. வே. ராதாகிருஷ்ணன், ஏதேன் பதிப்பகம். 3.**புதினம் –** பால்கட்டு, திரு.சோலை சுந்தரப் பெருமாள், பாரதி புத்தகாலயம். 4. **சிறுகதை –** நதி நீராடல், திரு. எஸ். சங்கரநாராயணன், அன்னை ராஜேஸ்வரி பதிப்பகம். 5.**நாடகம் (உரைநடை, கவிதை) –** மகாகவி பாரதி – நாடகம் (புதுச்சேரி வாழ்க்கை 1908–1918), முனைவர் அ. கனகராசு, காவ்யா பதிப்பகம்.

6. **சிறுவர் இலக்கியம் –**அறிவியல் அறிஞர்களின் கண்டுபிடிப்புகள், திரு.கே. நல்லசிவம், அறிவு பதிப்பகம் (பி) லிமிட். 7.**திறனாய்வு –** பாரதியியல் கவனம் பெறாத உண்மைகள், திரு. ய. மணிகண்டன், பாரதி புத்தகாலயம். 8.**மொழி வரலாறு, மொழியியல், மொழி வளர்ச்சி, இலக்கணம் –** உரையியல், திரு.பெ. மாதையன், பாவை பப்ளிகேஷன்ஸ். 9.**பிறமொழிகளிலிருந்து தமிழாக்கம் செய்யப்படும் நூல்கள் –** கண்ணாடிக் கல்லறை, திரு. யூமா. வாசுகி, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட். 10.**நுண் கலைகள் (இசை, ஓவியம், நடனம், சிற்பம்) –** இந்திய இஸ்லாமியக் கலை வரலாறு, **1.** பேரா. டாக்டர் எம். சாலமன் பெர்னாட்ஷா **2.** பேரா. பி. முத்துக்குமரன், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட். 11. **அகராதி, கலைக் களஞ்சியம், கலைச் சொல்லாக்கம், ஆட்சித் தமிழ் –** சோழநாட்டுச் சொல்லகராதி, முனைவர் மு. செல்வதுரை, தங்கராணி பதிப்பகம். 12.**பயண இலக்கியம் –** எனது தென்ஆப்பிரிக்க பயண அனுபவங்கள்,கலைமாமணி 'யோகா' (என். யோகானந்த் ), யோகா–சாவித் பப்ளிகேஷன்ஸ். 13.**வாழ்க்கை வரலாறு, தன் வரலாறு –** போதி தர்மர் பற்றிய அற்புதமான விஷயங்கள்,திரு. செல்வத்துரை குருபாதம், மணிமேகலை பிரசுரம். 14.**நாட்டு வரலாறு, கல்வெட்டு, தொல்லியல், கடலியலும் வணிக வழிகளும், அகழாய்வு –** தமிழகக் காசுகள், திரு. ஆறுமுக சீதாராமன், தனலட்சுமி பதிப்பகம். 15.**கணிதவியல், வானியல், இயற்பியல், வேதியியல் –** எண்களின் வரலாறு, திருமதி ரோகிணி ஜெகந்நாதன்,பீகாக் பதிப்பகம். 16. **மானிடவியல், சமூகவியல், புவியியல், நிலவியல் –** தமிழ்ப் பண்பாட்டில் எண்கள், திரு.எழிலவன், மணிவாசகர் பதிப்பகம். 17. **சட்டவியல், அரசியல் –** தகவல் அறியும் உரிமைச் சட்டமும் பயன்களும், திரு.புவனகிரி செயபாலன், ஜெயா பதிப்பகம், புவனகிரி. 18.**பொருளியல், வணிகவியல், மேலாண்மையியல் –** மேலாண்மை – அன்றும், இன்றும், என்றும், திரு. இரா. சுப்பராயலு, அகரம் பதிப்பகம். **19.மருந்தியல், உடலியல், நலவியல் –** திருமந்திரம் காட்டும் வாழ்வியல் நெறிகள், முனைவர் தி. மகாலட்சுமி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம். 20. **தமிழ் மருத்துவ நூல்கள் (சித்தம், ஆயுர்வேதம்) –** அகம் புறம் **64**, டாக்டர் ஜெ. ஜெயவெங்கடேசன், ஷான்லாக்ஸ் பப்ளிக்கேசன்ஸ். 21.**சமயம், ஆன்மிகம், அளவையியல் –** இந்திய மெய்யியல் பள்ளிகள்,திருமதி பா. அமுல்சோபியா, இராசகுணா பதிப்பகம். 22.**கல்வியியல், உளவியல் –** மனவளர்ச்சி குன்றுதல், திரு. ந.செந்தில்குமார், பாவை பப்ளிகேஷன்ஸ். 23.**வேளாண்மையியல், கால்நடையியல் –** பணப்பயிர் கரும்பு சாகுபடி, **1.** திரு. அ. சோலைமலை **2.** திரு. மு. காண்டீபன், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,

24.**சுற்றுப்புறவியல் –** பேரிடர் மேலாண்மை, திரு. ச. வைரவராஜன், சங்கமித்ரா பதிப்பகம். 25.**கணினியியல் –** கம்ப்யூட்டர் ஜாலம் 100, திரு. சுதன், பூங்கொடி பதிப்பகம். 26.**நாட்டுப்புறவியல் –** நாட்டார் சிந்து கதைப்பாடல்கள், திரு. பா. சுபாஷ்போஸ், பாவை பப்ளிகேஷன்ஸ். 27. **இதழியல், தகவல் தொடர்பு –** தடம் பதித்த சிற்றிதழ்கள், திரு.வே. சபாநாயகம், மணியம் பதிப்பகம். 28.**பிற சிறப்பு வெளியீடுகள் –** கோயில் ஆய்வும் நெறிமுறைகளும், திரு. அம்பை லோ. மணிவண்ணன், ஏ.ஆர். பப்ளிகேசன்ஸ். 29. **விளையாட்டு –** ஒற்றுமையை வளர்க்கும் பாரம்பரிய விளையாட்டுக்கள், சூர்யகுமாரி, நர்மதா பதிப்பகம். 30.**மகளிர் இலக்கியம் –** அடிமைப் பெண், திரு.கே.மனோகரன் (மானோஸ்), ஹலோ பப்ளிகேஷன்ஸ். 31.**தமிழர் வாழ்வியல் –** தமிழகத்தில் அரசுகளின் தோற்றம், திரு. வெ. பெருமாள்சாமி, பாவை பப்ளிகேஷன்ஸ்.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**